# மாணவர்களுக்குப் போட்டிகள்



போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் முன்னாள் தமிழக ரஞ்சி கிரிக்கெட் வீரர் முரளி.

**கும்மிடிப்பூண்டி, ஜன. 31:** கும்மிடிப்பூண்டியில் செயல்பட்டு வரும் காந்தி ஃபவுண்டேஷன் சார்பாக மகாத்மா காந்தியின் நினைவு நாளை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

விழாவுக்கு காந்தி ஃபவுண்டேஷன் நிறுவன தலைவர் எம். எல். ராஜேஷ் தலைமை வகித்தார். முன்னதாக மகாத்மா காந்தியின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.பின்னர் மாணவர்களுக்கு வினாடி வினா போட்டி, வண்ணம் தீட்டுதல் போட்டி, மெதுவாக சைக்கிள் ஓட்டுதல், ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட பல போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டி முடிவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக காந்தி ஃபவுண்டேஷன் நிர்வாக அதிகாரி ஆர். விஜயலட்சுமி, நிர்வாகிகள் திலீப்குமார் ஜெயின், பிரமோத் ஜெயின், சட்ட ஆலோசகர் ஷியாம் சுந்தர் மற்றும் முன்னாள் தமிழக ரஞ்சி கிரிக்கெட் வீரர் முரளி ஆகியோர் கலந்துக்கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளித்தனர்.